## திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
(17.09.2016 முதல் 21.09.2016 வரை)

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை– 612 101**
போன்: 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in Fax: 0435 2472881

==========================================================================

**தேதி:16.09.16**

### கடந்த 4 நாட்களில் நிலவிய வானிலை (12.09.2016– 15.09.2016)

| காரணிகள் | கடந்த நாட்களில் வானிலை |
|---|---|
| மழை (மி.மீ.) | 8.6 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 33 – 36 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 26 – 27 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 4 – 5 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 60 – 81 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 3 – 5 |

### அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1 17.09.2016 | நாள் 2 18.09.2016 | நாள் 2 19.09.2016 | நாள் 4 20.09.2016 | நாள் 5 21.09.2016 |
| மழை (மி.மீ.) | 0.5 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 32 | 31 | 31 | 31 | 31 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 26 | 25 | 25 | 25 | 25 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 5 | 5 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 62 – 78 | 64 – 80 | 64 – 80 | 64 – 80 | 64 – 80 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 4 | 4 | 4 | 4 | 4 |
| காற்றின் திசை | தென்மேற்கு | தென்மேற்கு | தென்மேற்கு | தென்மேற்கு | தென்மேற்கு |

17.09.2016 முதல் 21.09.2016 வரை வானம் மேகமூட்டத்துடன் இருள்சூழ்ந்து காணப்படும். எதிர்ப்பார்க்கப்படும் மழை 0.5 மி.மீ.

***வேளாண் அறிவுரைகள் :***

**பயிர் : நெல், உளுந்து, எள், கரும்பு மற்றும் பருத்தி**

**பருவம் : குறுவை : முதிர்ச்சி பருவம் சம்பா : விதைத்தல் மற்றும் நடவு**

- சம்பா வயல்களில் நேரடிவிதைப்பு செய்யும் பொழுது டிராக்டர் மூலம் இயங்கும் விதைக்கும் கருவிக்கு ஏக்கருக்கு 15 கிலோ மற்றும் ஆட்கள் கொண்டு தெளிக்கும் பொழுது ஏக்கருக்கு 30 கிலோ விதை அளவும் பரிந்துரைக்கப்படுகிறது. விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.
- சம்பா நடவு செய்யும் விவசாயிகள் 1 ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம், 10 கிலோ ஜிங்சல்பேட், 15 கிலோ யூரியா, 40 கிலோ டிஏபி மற்றும் 10 கிலோ பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இடவேண்டும். சம்பா நடவிற்கு முன் ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டு பூச்சி மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.
- பின் சம்பா / தாளடி பருவத்திற்கு ஆடுதுறை 38, ஆடுதுறை 46, ஆடுதுறை 49 மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, திருச்சி 3, மற்றும் கோ 50 ஆகிய இரகங்கள் சாகுபடி செய்ய சிபாரிசு செய்யப்படுகிறது.

**இயக்குநர்**